**THE LABOUR COURT, SALEM**
**C.P.No. 42 Of 2024**

**<u>02.06.2025</u>**

**PW1 – திரு. விஜயகுமார்**
**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை– (எதிர்மனுதாரர் தரப்பில்) –**

நான் 05.07.1982 ல் கம்பெனி அப்ரண்டிஸ் ஆக பணியில் சேர்ந்து 31.12.2016 ல் பணிமனை முதலாள் ஆக பணிஓய்வு பெற்றேன். 01.07.1984 ல் பணிவரன்முறை செய்யப்பட்டு உதவியாள் (Assistant Tradesman )ஆக பணிபுரிந்தேன். EL Surrender தொகை பழைய ஒப்பந்தப்படி வாங்கியுள்ளேன். புதிய ஊதிய ஒப்பந்தப்படி 45 1/2 நாட்களுக்கு EL Surrender தொகை கோரியுள்ளேன். 240 நாட்களுக்கு மேல் அதிகமாக இருந்த 45 1/2 நாட்களுக்கான தொகை கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் பணிஓய்வு பெறும்பொழுது 12 வது ஊதிய ஒப்பந்தம் அமலில் இருந்து அதன் அடிப்படையில் நிர்வாகம் எனக்கு சம்பளம் கொடுத்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் பணிஓய்வு பெற்றபிறகு 2018 ஆம் ஆண்டில் தான் 13 வது ஊதிய ஒப்பந்தம் அமலுக்கு வந்தது என்றால் 01.09.2016 வரவேண்டியது 2018 ஆம் ஆண்டு அமலுக்கு வந்தது. அகவிலைப்படி தற்பொழுது 30 சதவீதம் வழங்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். தற்பொழுது நான் வாங்கி வரும் பென்சன் தொகை ரூ.32415/– போன வருடம் நவம்பர் டிசம்பர் மாதங்களில் நான் வாங்கிய பென்சன் தொகை ரூ.26088/– மேற்படி தொகைகள் எனது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது என்றால் சரிதான். அகவிலைப்படி கூடுதலாக கணக்கிட்டு தான் பென்சன் தொகை வழங்கப்படுகிறது என்றால் பெயரளவில் வழங்கப்படுகிறது. 1986 ஆம் வருடம் நிர்வாகம் கணினிமயமாக்கப்பட்டது என்றால் சரிதான். முதலில் 1 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை சம்பளம் கணக்கிட்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். கணினிமயமாக்கப்பட்ட பிறகு 25 ஆம் தேதிமுதல் அடுத்த மாதம் 24 ஆம் தேதி வரை நாட்கள் கணக்கிடப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். 7 நாள் சம்பளதொகையாக எவ்வளவு கோரியுள்ளேன் என்றால் ரூ.12000/– மற்றும் சிறுதொகை கோரியுள்ளேன் எவ்வளவு என்று மறந்துவிட்டது.

கணினிமயமாக்கப்பட்டபோதே எனக்கு 6 நாள் சம்பளம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் இல்லை. 39 வருடங்கள் கழித்து தற்போதைய சம்பள அடிப்படையில் 6 நாள் சம்பளதொகை கேட்கிறேன் என்றால் சரிதான். EL Surrender மற்றும் பென்சன் நிலுவைதொகைகளுக்கு வட்டி கேட்டு மனு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தவறான கணக்கீட்டின் அடிப்படையில் மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரனை – இல்லை.

(Sd/- Tmt.M.Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem